**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 9/2024** **Date:08.10.2025**

**(PW1)- பத்மனாபதாஸ்**

**2**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். இந்த வழக்கு என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டும், விளம்புகை கேட்டும், மொத்த சொத்தும் எனக்கு வேண்டு என்று தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சித்தப்பா சிதம்பர தாணுபிள்ளையின் மகள் என்றால் சரிதான். எனது பெயர் என்ன என்றால் பத்மனாபதாஸ் ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம்.

2. என்னுடைய ஆதார் அடையாள அட்டையில் பத்மனாபதாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முருகன் என்பவருக்கு ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் கிரய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆதார் அடையாள அட்டையில் எனது பெயர் பத்மனாபதாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பெயர் பத்மதாஸ் என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக பத்மனாபதாஸ் என்று குறிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் எனது தந்தை உயிருடனில்லையென்றால் சரியல்ல . எப்போது எனது தந்தை காலமானார் என்றால் 14.11.2020 அன்று காலமானார்.

3. இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்த தொடர்புமில்லையென்றாலும் 1ம் பிரதிவாதியின் காப்பாளரான நித்தியசாந்தி என்பவர் தான் என் பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான எனது தந்தைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 வாரிசுகள் ஆவர். மூத்த சகோதரரின் பெயர் என்ன என்றால்

மயில்வாகனம் , நான் 2ம் மகன் ஆவேன். 3ம் சகோதரரான ஜோதி பாஸ் என்பவர் உண்டு என்றால் சரிதான்.

4. எனது தந்தையின் இறப்பிற்கு முன்பே மயில்வாகனம் மற்றும் ஜோதி பாஸ் இறந்து விட்டனர் என்றால் சரிதான். மேற்படி மயில்வாகனம் மற்றும் ஜோதி பாஸ் நபர்களுக்கும் திருமணமாகவில்ரைலயென்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. வழக்கு பட்டிகை சொத்து எனது தந்தையின் தந்தையான பத்மநாபபிள்ளைக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது தந்தைக்கு வழக்கு பட்டிகை சொத்தை தவிர வேறு சொத்துகள் உண்டு என்றால் சரிதான். மேற்படி சொத்துகளில் எனது மூத்த சகோதரர் மயில்வாகனம் மற்றும் ஜோதி பாஸ் எனது அப்பாவின் சொத்துகளை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5. எனது அப்பா எங்களுக்கு வாய் மொழி பாகமாக அவருடைய சொத்துகளை பிரித்து கொடுத்தார் என்றால் சரிதான். அதனடிப்படையில் நானும் ஒரு சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 10.800 சென்ட் ஆகும். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் குருந்தன்கோடு கிராமத்தில் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தின் எல்கைகள் பற்றி தெரியுமா என்றால்தெரியும்.

6. எனது அப்பா மற்றும் சித்தப்பாவிற்கு இடையே பாக பிரிவினை ஏற்படவில்லையென்றால் சரியல்ல, வாய் மொழியாக பாகம் செய்துள்ளார்கள். வாய் மொழியாக பாகத்தின் படி கிடைத்த சொத்துகளை எனது சித்தப்பா விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு லீலா பாய் என்ற சகோதரி உண்டு என்றால் சரிதான். மேற்படி லீலா பாய் என்பவருக்கு எனது அப்பா சொத்து கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, முன்னரே கொடுத்திருப்பார்கள்.

7. நான் சீனிபிரியா என்பவருக்கு தபசில் சர்வே எண்ணில் 6 சென்ட் நிலம் கிரயம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுரேஷ் என்பவருக்கு நான் ஒரு சொத்து கிரயம்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாதை அவகாசம் வேண்டி ஒரு சொத்து கிரயம் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஐயப்பன் என்பருக்கு கிரயம் கொடுத்துள்ளேன். மேற்படி சொத்துகள் அனைத்தும் எனது அப்பாவின் சொத்துகள் என்றால் சரிதான். எனவே எனது அப்பா பட்டிகை சொத்தை மட்டும் தான் எனக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தை தான் நான் வாசாஆ.1 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. வாசாஆ. 1 ஆவணம் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணத்தில் எனது தம்பி ஜோதிபாஸ் சாட்சிகை யெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணம் எழுதும் போது நானும் ஜோதி பாஸ்ம் தான் எனது தந்தையை கொண்டு வந்தோம் என்றால் சரியல்ல, நான் வரவில்லை . எனது அப்பா பட்டிகை சொத்தை விற்பனை செய்து எனக்கும் எனது தம்பி ஜோதி பாஸ்க்கும் கிரய பணத்தை பிரித்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

9. தபசில் சொத்து எனது தந்தைக்கு உரிமைப்பட்டது என்றாலும் அதை விற்பனை செய்ய அவருக்கு உரிமை உண்டு என்றால் சரிதான், அவரை ஏமாற்றி கிரயம் பெற்றனர். கிரயம் செய்யும் சமயத்தில் எனது தந்தை வயதான நிலையில் இருந்தார் என்றாலும் கை நடுக்கம் உண்டு என்றாலும் சரிதான், ஞாபக மறதியும் இருந்தது.கை நடுக்கம் இருந்த காரணத்தினால் அவர் கைரேகையிட்டார் என்றால் சரிதான். தபசில் சொத்து எனது தம்பி மற்றும் எனது கூட்டு அவகாசத்தில் இருந்தது என்று வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எனது தந்தை பெயரில் மட்டும் தான் தபசில் சொத்து இருந்தது என்றாலும் சரிதான்.

10. தபசில் சொத்துகளை விற்பனை செய்ய எனது தந்தைக்கு முழு உரிமை இருந்த காரணத்தினால் அவரிடமிருந்து 2ம் பிரதிவாதி கிரயம் பெற்று பட்டா பெற்று தீர்வை செலுத்தி மின்சார வரி செலுத்தி கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான், ஏமாற்றி எழுதி வாங்கி விட்டார்கள். ஏமாற்றி எழுதி வாங்கி விட்டது தொடர்பாக இந்நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அவ்வாறு ஏமாற்றி எழுதி வாங்கியிருந்தால் எனது அப்பாவுடன் சென்ற எனது

தம்பி ஜோதி பாஸ் கிரயம் செய்யும் சமயத்தில் ஆட்சேபணை செய்திருப்பார் என்றால் அவர் பிரதிவாதியுடன் கூட்டாகும்.

11. நான் பிரதிவாதிகளோடு சண்டை என்றால் சரிதான். மேற்படி சண்டையின் விரோதத்தினால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பேச்சுவார்த்தை கிடையாது தவிர சண்டை கிடையாது. தபசில் சொத்தை கிரயம் செய்யும் போது எனது தந்தை நல்ல மனநிலையில் இருந்தார் என்றாலும் அவர் படித்தவர் சுய நினைவோடு தான் தபசில் சொத்தை கிரயம் செய்துகொடுத்தார் என்றாலும் சரியல்ல. அவர் கிரயம் கொடுத்த சொத்தை பொறுத்து கேள்வி கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையுமில்லையென்றால் சரியல்ல.

12. நித்தியசாந்தி மற்றும் எனக்கு நல்ல உறவு முறை உள்ளது என்றால் சரிதான், எனது அம்மா முறை ஆகும். அவருடன் கூட்டு சேர்ந்து தபசில் சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது சகோதரர் ஜோதி பாஸ்ம் உயிருடன் இருந்தும் நித்திய சாந்தி என்பவரை இந்த வழக்கில் எனது அப்பாவின் பாதுகாவலராக நியமிக்க வேண்டிய அவசியம் என்ன என்றால் நான் சென்னையில் வேலைக்கு சென்றேன், ஜோதி பாஸ் ஆட்டோ ஓட்டுநர் ஆவார்.

13. பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் நித்தியசாந்தியின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை வழக்கின் எண் என்ன என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய எந்த உரிமையுமில்லையென்றாலும் பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்